தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுப் பணிகளைத் துரிதப்படுத்தவும், அதற்கான

# உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நிதி ஒதுக்கீடு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மே. 4-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (2.5.2025) தலைமைச் செயலகத்தில், பொது இடங்களில் குறிப்பாக நகரப் பகுதிகளில் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பொதுமக்களுக்கு பாதிப்புகளும் அச்சுறுத்தலான சூழலும் நிலவுவதை கருத்தில்கொண்டு, இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

தெரு நாய் தொல்லைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகள், கால்நடை பராமரிப்புத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய துறைகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் பேசும்போது, பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய, குறிப்பாக நகரப் பகுதிகளில், நாய்கள் இனப்பெருக்க கட்டுபாடு நடவடிக்கைகளை தீவிரமான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு நல்லதொரு மாற்றத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, சாலைகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடிப்பதற்கும், நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு பணிகளை அதிகளவில் மேற்கொள்ளவும், பின்வரும் நடவடிக்கைகள் எடுக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

1. நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள 500 மருத்துவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கிடவும், உள்ளாட்சி அமைப்புகளில் 500 நபர்களுக்கு நாய்களை பிடிப்பதற்கான பயிற்சிகளும் வழங்கப்படும்.

2. தமிழ்நாடு முழுவதும் 100 அரசு கால்நடை மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை செய்யும் வசதிகள் உருவாக்கப்படும்.

3. கைவிடப்பட்ட, நோய் வாய்ப்பட்ட, காயமடைந்த, வயதான மற்றும் ஊனமுற்ற நாய்களுக்கு 72 காப்பகங்கள் அமைக்கப்படும். காப்பகங்கள் அமைக்க இடம் உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும். தொண்டு நிறுவனங்கள் இக்காப்பகங்களை பராமரிக்கும் பணியை மேற்கொள்ளும். இதற்கு தேவையான நிதி ஒதுக்கப்படும்.

4. மேலும், விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள வசதி இல்லாத பகுதிகளில் கூடுதலாக அறுவை சிகிச்சை மையங்கள் மற்றும் அத்துடன் இணைந்த நாய் காப்பகங்கள் கால்நடை மருத்துவ வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. மாவட்ட அளவில் நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு/ வெறிநோய் தடுப்பூசி பணிகள் துறை மற்றும் தனியார் மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ள கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. இந்திய விலங்குகள் நல வாரியத்தின் 11.4.2025ம் அறிவிக்கையின் படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாடு கண்காணிப்பு குழு அமைத்து சமீபத்தில் உத்தர விடப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ளூர் கண்காணிப்பு குழு அமைத்து நாய் இனப்பெருக்க கட்டுப்பாட்டு பணிகளை தீவிரமாக மேற் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதை கண்காணிக்க ஏதுவாக தலைமையிடம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் தேவையான அலுவலர்களை நியமித்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதை தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் (AWB) உறுதி செய்ய வேண்டும். இப்பணிகளுக்கு தேவையான நிதி வழங்கப்படும்.

8. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே 5 மையங்கள் செயல்படும் நிலையில், புதிதாக 10 நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையங்கள் உருவாக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும், இத்துடன் இணைந்து 10 புதிய கால்நடை மருத்துவமனைகள் தொடங்கவும் இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

9. அதிகரித்துவரும் நாய்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை பணிகளை துரிதமாக மேற்கொள்ள கூடுதலாக நாய் பிடி வாகனங்களை உடனடியாக கொள்முதல் செய்யவும், அதற்கு தேவையான பணியாளர்களை நியமிக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் நடவடிக்கைகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை விரைந்து முடித்து, செயல்பாட்டிற்கு கொண்டு வந்து நாய் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் . அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், விலங்குகள் நல வாரிய உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !






# தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | விருதுநகர் வடக்கு | இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம், மல்லாங்கிணர். |
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மாணவர்களின் இடைநிற்றலுக்கு வழிவகுக்கும்!

# கல்வியில் காவிச்சாயம் பூசும் மோடி அரசு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, மே4-

'தினகரன்' நாளேடு ஒன்றிய மோடி அரசின் 2020 புதிய கல்விக் கொள்கை குறித்து கருத்து தெரிவித்துள்ளது. இதனால் மாணவர்களின் எதிர்காலம், இடைநிற்றலும் கேள்விக் குறியாகிவிடும் கல்வியில் காவிச்சாயம் பூசும் முயற்சியில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது. எதிர்கால சந்ததியினரை அழிக்கும் செயல் என குற்றம் சுமத்தியுள்ளது.

அது வருமாறு:-


தினகரன்
மே 3, 2025 சனிக்கிழமை
இடைநிற்றலுக்கு வழி
ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் கொள்கை என்பது தொடக்கத்தில் இருந்தே சர்ச்சையாகி வருகிறது. தேசியக் கல்விக்கொள்கை வரைவு வெளியிடப்பட்ட பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அரசியல் கட்சியினர், சமூக செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மாணவர் அமைப்பினர், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் அந்த வரைவு அறிக்கைக்கு எதிராக போர்க் கொடி தூக்கியதோடு பல்வேறு மாற்றங்களையும் முன் வைத்தனர். ஏறக்குறைய நாடு முழுவதும் இருந்து 2.25 லட்சம் கருத்துகள் அனுப்பப்பட்டன. ஆனால் எந்த கருத்தையும் விவாதிக்காமல் ஒன்றிய அரசு அமல்படுத்தியது.
குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக சிறு விவாதம்கூட நடத்தாமல் கொரோனா முடக்கத்தை காரணம் காட்டி அமைச்சரவையை கூட்டி புதிய தேசிய கல்விக்கொள்கைக்கு ஒப்புதல் பெற்று தவறான முன் உதாரணத்திற்கு

ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் / கொள்கை என்பது தொடக்கத்தில் இருந்தே சர்ச்சையாகி வருகிறது. தேசியக் கல்விக் கொள்கை வரைவு வெளியிடப்பட்ட பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அரசியல் கட்சியினர், சமூக செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மாணவர் அமைப்பினர், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பிளரும் அந்த வரைவு அறிக்கைக்கு எதிராக போர்க் கொடி தூக்கியதோடு பல்வேறு மாற்றங்களையும் முன் வைத்தனர். ஏறக்குறைய நாடு முழுவதும் இருந்து 2.25 லட்சம் கருத்துகள் அனுப்பப்பட்டன. ஆனால் எந்த கருத்தையும் விவாதிக்காமல் ஒன் றிய அரசு அமல்படுத்தியது.

குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக சிறு விவாதம்கூட நடத்தாமல் கொரோனா முடக்கத்தை காரணம் காட்டி அமைச்சரவையை கூட்டி புதிய தேசிய கல்விக்கொள்கைக்கு ஒப் புதல் பெற்று தவறான முன் உதாரணத்திற்கு வழிவகுத்தது. தேசியக் கல்விக்கொள்கையை தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. குறிப்பாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், "தேசியக் கல்விக் கொள்கை என்பது சமூக நீதிக்கும், தமிழுக்கும் வேட்டு வைக்கும் கொள்கை. தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் வேட்டு வைக்கும் கொள்கையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது" என தொடர்ந்து கடுமையாக எதிர்த்து வருகின்றார்.

தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் ஒதுக்க வேண்டிய நிதியை கூட ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தது. கல்வியில் காவி சாயத்தை பூச முயற்சிப்பது, குலக் கல்வித் திட்டத்தை மறைமுகமாக புகுந்த நினைப்பது, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை கட்டாயமாக்குவது என பல்வேறு விமர்சனங் களும், குற்றச்சாட்டுகளும் ஒன்றிய அரசின் மீது அடுக்கடுக்காக வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழலில்தான் தேசியக் கல்விக்கொள்கை 2020ன்படி பொதுத்தேர்வில் 30 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண் எடுத்தால் 3,5,8ம் வகுப் பில் பெயில் என்ற நடைமுறை சிபிஎஸ்இ பள்ளிகளில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் இருந்து வந்த 8ம் வகுப்பு வரை கட்டாயம் பாஸ் என்ற முறை மாற்றப்பட்டு தற்போது இந்த புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாது தங்களின் குழந்தை குறைவான மதிப்பெண் எடுத்தால் பெயில் ஆக்க சம்மதிப்பதாக பெற்றோர்களிடமே சிபி.எஸ்.இ பள்ளிகள் ஒப்புதல் கடிதம் பெற்று வருவது கொடுமையிலும் கொடுமை. 3ம் வகுப்பு குழந்தையை பெயில் ஆக்கும் போது தன்னோடு படித்த அனைவரும் அடுத்த வகுப்பிற்கு சென்று தான் மட்டும் அதே வகுப்பில் படிக்கும் போது அந்த குழந்தையின் மனநிலை எப்படி இருக்கும்? அது எந்த மாதிரியான விளைவுகளையும், மன அழுத்தத்தையும் உண்டாக்கும் என்ற அடிப்படை புரிதல்கூட இல்லாமல் இந்த நடைமுறையை கொண்டு வந்திருப்பது ஏற்கமுடியாததாக உள்ளது. மேலும் இந்த நடைமுறை மாணவ, மாணவிகளின் இடைநிற்றலுக்கு வழிவகுப்பதோடு குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கச்செய்யும் என்பது தான் உண்மை.

இவ்வாறு "தினகரன்" நாளேடு மோடி அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

**தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை**

# தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!**

தென்காசி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கரலிங்கம் (எ) கருணாநிதி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **சி.சுந்தர்** (8/1, தென்றல் நகர், வாசுதேவநல்லூர், தென்காசி மாவட்டம்) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-05-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

இராணிப்பேட்டை மாவட்டம் - காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில்

# 102 பேருக்கு - 'கலைஞரின் கனவு இல்லம்' கட்ட பணி ஆணைகள்!

## அமைச்சர் ஆர். காந்தி வழங்கினார்!

இராணிப்பேட்டை, மே 4-

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் 102 பேருக்கு கலைஞரின் கனவு இல்லம் கட்ட பணி ஆணைகளை கைத்தறி துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார்

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் 2025-2026 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 102 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ஜே.யு. சந்திரகலா தலைமை தாங்கினார். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஜெயசுதா, ஒன்றியக் குழுத் தலைவர் அனிதா குப்புசாமி, பேரூராட்சி தலைவர் லதாநரசிம்மன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ரஹ்மத் பாஷா அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு ரூ.35.70 லட்சம் மதிப்பில் 102 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கி பேசியதாவது :

இதற்கு முன்பாக அரசை தேடி மக்கள் செல்வார்கள். ஆனால் இப்போது மக்களைத் தேடி அரசு செல்கிறது . மக்களைத் தேடி மருத்துவம் இல்லம்தேடி கல்வி உள்ளிட்ட மகத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தி.மு.க. அரசுப் கட்சி பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் சமமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் கடந்த 1975ல் தலைவர் கலைஞரால் ஆரம்பிக்கப்பட்டது பின்னர் 2010ல் குடிசை இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே பயனாளிகள் உடனுக்குடன் வீடு கட்டி முடிக்கப்பட்டால் அடுத்தவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார் .

உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல். ஈஸ்வரப்பன் எம்எல்ஏ, ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் ஓச்சேரி எம். பாலாஜி வேடந்தாங்கல் தெய்வசிகாமணி பொதுக் குழு உறுப்பினர் சி.மாணிக்கம் ,நகர செயலாளர் பாஸ் என்ற நரசிம்மன் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

முடிவில் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.



இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளிகள் 12 பேருக்கு வீடு கட்ட பணி ஆணையை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, ஒன்றிய குழு தலைவர் அனிதா குப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர் ஓச்சேரி பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.